DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 36 /2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | ரவிகிருஷ்ணன் |
| Father's /Husband Name | : | கோவிந்தசாமி |
| Village | : | அய்யாநல்லூர் |
| Taluk | : | திருவிடைமருதூர் |
| Age | : | 39 |
| Occupation | : | விவசாய வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day March 2025.

Accused absent and petition U/sec. 317 Cr.P.C (355 BNSS) filed and allowed. App and defense counsel present.

**முதல் விசாரணை:-**

இவ்வழக்கில் இறந்துபோன பவுனாம்பாள் எனது அம்மா. 28.04.2022ம் தேதி மதியம் 01.30 மணியளவில் கும்பகோணம் மடத்து தெருவில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது அம்மா நடந்து சென்றபோது TN 10 3967 Splender இருசக்கர வாகனத்தில் குகன் என்பவர் வேகமாக வந்து எனது அம்மா மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அதில் எனது அம்மாவிற்கு தலையின் பின்பகுதி, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது அம்மாவை ஆட்டோவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக கபில்தேவ் எனக்கு போன் மூலம் தகவல் அளித்தார். நான் மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது எனது அம்மா மயக்கத்தில் இருந்தார். இது சம்பந்தமாக நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அன்றைய தினமே எனது அம்மா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தை போலீசார் எழுதினார்கள். புகார் வாக்குமூலத்தில் முதல் 5 வரிகள் நெருக்கமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் x குறித்த இடத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கபில்தேவ் எனக்கு மாமா முறை ஆகும். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், கபில்தேவ் நேரடியாக பார்த்ததாக

**என்னிடம் கூறினார். நான் எழுததாத வெற்றுதாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-M.Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.